அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
வைரவிழா மலர் வெளியீடு

# இந்து ஒளி
## Hindu Oli


## ALL CEYLON HINDU CONGRESS
### DIAMOND JUBILEE COMMEMORATIVE ISSUE

60

1955-2015



# செல்வச்சந்நிதி சித்தர் பாரம்பரியம்



**சி.ரமணராஜா**
விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

## அறிமுகம்

ஈழத்து இந்து சமயப் பண்பாட்டை வளம்படுத்தியவர்களுள் சித்தர்களுக்கும் முக்கியமான இடமுண்டு. கடையிற்சுவாமிகள் ஈழத்து சித்தர் பரம்பரையின் முன்னோடியாகவும், முதலாமவராகவும் விளங்குகின்றார். இவரால் தோற்றுவிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்ற சித்தர் செல்நெறியானது ஈழத்து இந்துசமயப் புலத்தை விருத்தி செய்திருப்பதுடன் உலக நாகரிகக் கூறுகளிலும் கலந்து நிற்கின்றது. ஈழத்தில் தோன்றிவாழ்ந்த சித்தர்கள் இந்தியச் சித்தர்களைப் போன்று நிறுவன எதிர்ப்பாளர்களாகக் காணப்படவில்லை. சைவத்திருக்கோயில்கள் அவர்களின் வாழிடங்களாக அமைந்திருக்கின்றன. நகுலேஸ்வரம், ஏழாலை சாதுசங்கமடம், இணுவில் காரைக்கால் சிவன்கோயில், கதிர்காமம், நல்லூர், செல்வச்சந்நிதி போன்ற ஆலயங்கள் இவ்வகையில் சுட்டத்தக்கன. சித்தர்களின் வாழிடங்களாக திருக்கோயில்கள்காணப்பட்டதனால்அவைமக்கள்மத்தியில் செல்வாக்குப் பெற்ற இடங்களாகவும், நம்பிக்கைக்குரிய வழிபாட்டிடங்களாகவும் மாற்றமடைந்து சிறப்புற்றன.

ஈழத்திலுள்ள சைவத் திருக்கோயில்களின் வரலாறும் சிறப்புக்களும் சைவசமயப் பாரம்பரியத்துடன் இணைந்து கலந்து உருவானவையாகும். சைவசமயப் பண்பாட்டு ஊற்றுக்கள் ஆழமாக ஊன்றப்பட்டிருக்கும் சமய நிறுவனங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள முருகன் ஆலயங்கள் யாழ்ப்பாணத்துச் சித்தர் பாரம்பரியத்தைச் செழிப்பாக்கிய தன்மையில் தனித்துவமான சிறப்பைப் பெறுகின்றன. கந்தபுராணக் கலாசாரமே யாழ்ப்பாணத்தின் சைவப்பண்பாட்டுத் தனித்துவம் என்று போற்றப்பட்டும் விதந்து கூறப்பட்டும் வரும் ஒரு மதப்பண்பாட்டுச் சூழலில், யாழ்ப்பாணத்தின் மிக முக்கியமான சனரஞ்சகமான முருக தலங்களில் ஒன்றாகத் தொண்டைமானாறு செல்வச் சன்னிதி ஆலயம் விளங்குகின்றது.[1]

திருக்கோயில் சார்ந்த சமூகப்பண்பாட்டை பேணிவரும் தன்மையினால் ஈழத்துத்திருத்தலங்களுள் செல்வச்சந்நிதி ஆலயத்திற்குத் தனித்துவமான மதிப்புண்டு. இந்தவகையில் இவ்வாலயச் சூழலில் வலிமையானதொரு சித்தர் பாரம்பரியம் குருசீட மரபுவழி உறவினூடாக தொடருறுப் பெற்று வருகின்றமை சிறப்பான அம்சமாகும்.

## ஆய்வுப்பிரச்சினையும் அணுகு முறையும்

செல்வச்சந்நிதி ஆலயசித்தர் பாரம்பரியம் பற்றிய முழுமையான ஆய்வுகள் எவையும் இதுவரை வெளிவராத நிலையில் இவ்வாலயச் சூழலில் வாழ்ந்த சித்தர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் இடர்பாடுகள் உள்ளன. ஆயினும் கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயச் சித்தர்பாரம்பரியம் பற்றி ஆய்விற்குட்படுத்த வேண்டியுள்ளது.

செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் வாழ்ந்து அவ்வாலயப் பண்பாட்டை வளம்படுத்திய சித்தர்கள் பற்றிய செய்திகளை இவ்வாலய வரலாற்றினை எடுத்துக்கூறும் சில நூற்குறிப்புகளினூடாகக் கண்டறிந்து, கள ஆய்வின் கருவிகளான நேர்காணல், உரையாடல்கள், நேரடி அவதானிப்புகள் மூலமாகப் பெற்றுக் கொண்ட தரவுகளினூடாக இவ்வாலயச்சித்தர் பாரம்பரியம் பற்றிய ஆவணப்படுத்துதல் என்பது இவ்வாய்வின் நோக்கமாகும். ஆகவே வரலாற்றியல் ஆய்வு முறைமை, விபரண ஆய்வு முறைமை மற்றும் களஆய்வு முறைமை ஆகிய ஆய்வு முறையியல்களின் துணையுடன் இவ்வாய்வு நிகழ்த்தப்படுகின்றது.

---

1 சிவத்தம்பி, கா., 2000, யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை, பக். 152 - 153.

## யாழ்ப்பாணத்துச் சித்தர் பாரம்பரியம்

யாழ்ப்பாணத்துச் சித்தர் பாரம்பரியம் கடையிற் சுவாமிகளை அடியூற்றாகக் கொண்டுள்ளது. நல்லூர் முருகனின் ஆழ்ந்த இறைபற்றினாலும் யாத்திரைப்பலனாகவும் சிதம்பரத்திலே வைரமுத்துச் செட்டியாருக்கு குருவாக வாய்க்கப்பெற்றவரே முத்தியானந்தர் என்னும் இயற்பெயர் கொண்ட கடையிற் சுவாமிகள். அவ்வாறாயின், யாழ்ப்பாணச் சைவச் சூழலில் சித்தர் பாரம்பரியம் தோன்றி பெருவளர்ச்சியடைந்து சைவப்பண்பாட்டு வளர்ச்சியில் பெரும்பங்கெடுப்பதற்கு ஊற்றுக்காலாக விளங்கிய பெருமை நல்லூர் வைரமுத்துச் செட்டியாருக்கேயுண்டு எனக் கருதலாம்.

கடையிற் சுவாமிகளை மூலமாகக் கொண்ட யாழ்ப்பாணத்துச் சித்தர் பாரம்பரியமானது; செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள்,பரமகுரு சுவாமிகள், சடைவரத சுவாமிகள், சார்ஜன் சுவாமிகள், சுப்பிரமணிய சுவாமிகள் (அமெரிக்கா), நரிக்குட்டி சுவாமிகள் (அவுஸ்திரேலியா), குழந்தைவேல் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள்,நவநாதசித்தர், குடையிற்சுவாமிகள், நயினாதீவுச் சுவாமிகள், சின்னத்தம்பி சுவாமிகள், முருகுப்பிள்ளை சுவாமிகள் (கடவுள் /மௌனகுரு சுவாமிகள்),ஆநந்த சடாட்சரகுரு, செல்லாச்சி அம்மையார் (சுன்னாகம்), சடையம்மா, (திருநெல்வேலி), மங்கையற்கரசி அம்மையார் (உசன்), பொன்னம்மா அம்மையார் (உசன்) என்றவாறு சித்தர்பரம்பரை விரிவுபட்டு நிற்கின்றமை காணத்தக்கது.

ஈழத்தில் சித்தர்களை 'சித்தர்' என்று சுட்டுணர்த்துவதற்கு மாறாக 'சுவாமிகள்' என்றே சுட்டப்பட்டு வருகின்றமை சிறப்பிற்குரிய ஒன்றாகும். யாழ்ப்பாணத்துச் சித்தர் பாரம்பரியம் ஆலயங்களை மையப்படுத்திச் செயற்பட்டிருந்தது. குறிப்பாக செல்வச்சந்நிதி, நல்லூர், கதிர்காமம் முதலிய முருகனாலயங்களே அவர்களின் கேந்திர நிலையங்களாக விளங்கின. செல்வச்சந்நிதி, நல்லூர் போன்ற ஆலயங்களினது அருள் வீச்சுக்கு அங்குள்ள சமாதிகளே காரணமென்று பெரியோர்கள் பகர்ந்துள்ளனர்.

## செல்வச்சந்நிதி ஆலய சித்தர் பாரம்பரியம்

சமூகத்தில் வேரோடியுள்ள நிறுவனங்களுள் சமயம் எனும் அமைப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. சமூகப் பிராணியான மனிதனின் அகப்புற வாழ்வினை தூயதாக்கி வளப்படுத்துவதில் சமயங்கள் முனைப்புக் காட்டுவதனால் பண்பாட்டு அம்சங்களிலும் சமயத்திற்கு முதன்மையிடமுண்டு. இவ்வமைப்பின் உயிரோட்டத்துக்கு

ஆதரவளிக்கும் சமய நிறுவனங்களாக ஆலயங்கள் உள்ளன. ஆகவே சமூகத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு ஆலயங்களுக்குண்டு. இதனடிப்படையில் நோக்குமிடத்து ஆலயம் சார்ந்த பண்பாட்டுப் பேணல்களானவை சமயம் உயிரோட்டம் பெறுவதற்கும், சமூகத்தில் சமயத்தின் நீடித்த இருப்புக்கும் அடிப்படையாகின்றன எனலாம்.

ஈழத்திலுள்ள சைவத்திருக் கோயில்களுள் செல்வச் சந்நிதி ஆலயத்துக்கென தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியம் உண்டு. இவ்வாலயத் தோற்றம் பற்றிய வரலாற்றுடன் கர்ணபரம்பரைக் கதைகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. இவ்விடயம் பற்றிய சிந்தனையில்,

*"...ஜராவசு என்பவர் தமக்கு முத்தி தருமாறு முருகனை வேண்டினான். அதற்கு முருகன் இந்துவாரியின் தென்பகுதியில் ஒரு நதியுண்டு. அங்கு வீரவாகுதேவர் என்னைக் குறித்துப் பூசை செய்த இடமுண்டு. அங்கு தவமிருந்து முத்தியடைவாய் எனக் கூறினார். முருகப் பெருமானின் கட்டளைப்படி ஜராவசு இலங்கையின் வட பகுதியில் இந்து சமுத்திரத்தின் தெற்குப் பகுதியிலுள்ள வல்லியாற்றின் (தற்போது தொண்டைமானாறு) கரையில் மரநிழலில் தவமிருந்து முத்தியடைந்தான். ஜராவசு தவஞ்செய்து அடங்கிய இடமே தற்போது நாகதம்பிரானுக்கு அருகிலுள்ள பூவரசு நிலையமாகும்."*[2]

எனவருங்கருத்து குறிப்பிடத்தக்கதாகும். இன்றும் இவ்வாலயத்தின் மேற்குப் பகுதியில் சிறப்பான வழிபாட்டிற்குரியதாகவும், அருள் வீச்சுக்குரிய இடமாகவுமுள்ள பூவரசு மரம்இவ்வாலயத்தின் தலவிருட்சமாக உள்ளது. இத்தலவிருட்சம் தவஞானி ஒருவருடைய சமாதியிலிருந்து தோன்றியதாக அறியப்படுகின்றது. இவ்வரலாற்றுச் செய்திகள் இக்கோயிலுக்கென அமைந்த சித்திரத்தேரில் சிற்பங்களாக சித்திரிக்கப்பட்டுள்ளன. இப்பூவரசு மரத்தின் சிறப்பினை,

*"கோயிலின் உள்வீதியில் மேற்றிசையிற் பழைய பூவரசு மரமொன்றைக் காணலாம். இது ஒரு பெரிய தவசிரேட்டர் சமாதியான இடத்தின் மீது நிழல்தரும்மரமாகக் காட்சியளிக்கின்றது. சில சமயங்களில் இதன் இலைகள் யாவும் உதிர்ந்து மரமே பட்டுவிட்டது போல இருக்கும். ஆனால் எதிர்பாராத விதமாக அழகிய குடை விரித்திருப்பது போலச் சடைத்து வளர்ந்து பச்சிலைகளைத் தள்ளி சமாதிக்கு நிழல் தரும் விருட்சமாக காட்சியளிக்கும். இது ஒரு அற்புதமான விருட்சம்"*

என்று ஆனந்தாச்சிரமத்திலுள்ளமயில்வாகனம் சுவாமியவர்கள் ஒருமுறை என்னிடம் கூறினார்கள் என்று குல சபாநாதன் குறிப்பிட்டுள்ளார்.[3] இக்கோவிலமைப்பு ஏற்படுதவற்கு முன்னர் தவசிரேட்டர் ஒருவரின் சமாதியன்றி இரு சமாதிகள் இருந்தாகவும் அறியமுடிகிறது.

இலங்கையின் தென்பால் கதிர்காம சேத்திரம் விளங்குவது போல, வடபால் செல்வச் சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயத்தில் இரண்டு மகான்களின் சமாதி உண்டென்று ஆன்றோர்கள் கூறுவர்[4]. ஆகவே இவ்வாலயத்தின் தோற்றுவாய் சித்தர்களுடன் தொடர்புபடுகின்றது என்பதும், இத்தலத்திலுள்ள பூவரசுமரம் அத்தகைய தொடர்பினை மென்லேும் வலுப்படுத்துகின்றது என்பதும் குறிப்பிடத்தக்க பதிவுகளாகும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஏனைய ஆலயங்களுக்கு இல்லாத சிறப்பு செல்வச்சந்நிதிக்கு உண்டு. இவ்வாலயச் சூழல் தோற்றுவித்த சித்தர் பாரம்பரியமானது இவ்வாலயம் சார்ந்த ஒரு சமூகப்பண்பாடு உருவாகி பரவிப்படரவும், நல்லிணக்கம் ஏற்படவும் ஏதுவாக அமைந்தது. இந்தவகையில் முருகேசு சுவாமிகள், (பருத்தித்துறை தும்பளை), நடராசா சுவாமிகள் (மந்துவில்), சடைவரத சுவாமிகள் (அச்சுவேலி), கௌரிபாலா சுவாமிகள் (ஜேர்மன்), ஆனைக்குட்டி சுவாமிகள் (சோல்பரிப் பிரபுவின் மகன்), நரிக்குட்டி சுவாமிகள் (அவுஸ்ரேலியா), பன்றிக்குட்டி சுவாமிகள் (தென்னிந்தியா), மயில்வாகனம் சுவாமிகள் (ஆனைப்பந்தி), சின்னத்தம்பி சுவாமிகள் (மறவன் புலவு), கடவுள் சுவாமி (மௌனகுரு சுவாமி/ முருகுப்பிள்ளை சுவாமி - அல்வாய்), முதலியோர் உட்பட பலர் இவ்வாலயச் சூழலில் சித்தர் பாரம்பரியம் செழிக்கத் துணை நின்றவர்களாவர்.

யோகர் சுவாமிகள், குடையிற் சுவாமிகள் போன்றோர் இவ்வாலய தரிசனம்செய்துள்ளனர். சிவயோக சுவாமிகள் சந்நிதி ஆலயம் முழுவதும் சிவலிங்கம் நிறைந்திருப்பதாகக் கருதியவர். அவர், பூவரசு மரத்தடியில் சென்று வணங்கியதாகவும், முருகுப்பிள்ளை சுவாமிகள் வடக்குப்பக்கமாக தகரமடம் அமைத்து வாழ்ந்த காலத்தில் குடையிற் சுவாமிகள் அங்கு வந்து சென்றதாகவும் அறிய

2 மனோன்மணி சண்முகதாஸ், அருணாசலம் சண்முகதாஸ், 2010, ஆற்றங்கரையான், பக். 36 -37.

3 மேலது, பக். 8 - 9.

4 மேலது, ப. 9.

முடிகின்றது.

பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை முருகேசு என்பவரே பின்னாளில் முருகேசுச் சுவாமிகள் என்று அறியப்பட்டவர். இவருக்கும் சந்நிதியான் ஆலயத்திற்குமான உறவு நெருக்கமானது. இவரது வாழ்வியலின் அனுபவங்கள் யாவும் செல்வச்சந்நிதி ஆலயத்துடன் தொடர்புற்றுக் காணப்படுகின்றன. இத்தகைய வரலாற்றுச் செய்திகள் பற்றி சடைவரத சுவாமிகளின் சீடராக விளங்கிய குல சபநாதன் (கருணானந்தம்) குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் சுவையானவை. ஆற்றங்கரையான் என்னும் இவ்வாலயம் பற்றிய நூலில் இவர்பற்றிய தெளிவான பதிவுகள் காணப்படுகின்றன.

இறையடியவர்களை இறைவன் திருவுருவாகக் கண்டு உணவளித்து இன்பம் கண்டவர் மயில்வாகனம் சுவாமிகள். இந்திய யாழ்ப்பாணத் தொடர்பினைப் பண்பாட்டு ரீதியாக பிணைப்புறச் செய்த பலருள் இவரும் ஒருவர். சென்ற நூற்றாண்டின் தலைசிறந்த மகரிகூஷியாகப் போற்றப்பட்ட ரமணமகரிகூஷியிடம் சென்று அவரிடம் தீட்சை பெற்று சிக்ஷயனாக விளங்கினார். "நீ எங்கிருந்து வந்தாயோ அங்கேயேபோய்த் தொண்டு செய்" என்ற ரமண மகரிகூஷியின் மகாவாக்கியத்திற்கு கட்டுப்பட்ட இவர் செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் பற்றைகள் நிறைந்த இடத்தை சுத்தம் செய்து சிறுகுடில் அமைத்துச் செயற்பட்டவர்.

அவ்வாறு அவரால் அமைக்கப்பட்ட சிறுகுடிலே இன்று "ஆனந்தாச்சிரமம்" என்ற பெயரில் சிறப்புற்று பன்முகப் பணிகளோடு இயங்கி வருகின்றது. அடியவர்களுக்கு உணவளித்தல் என்பதனை மையப் பணியாகக் கொண்டிருப்பினும், பஜனைகள், சமய ஒன்று கூடல்கள், கூட்டுப்பிராத்தனைகள், சொற்பொழிவுகள், பிரசங்கங்கள் மற்றும் நூல் வெளியீடுகள் முதலியன நடைபெறும் இடமாகவும் ஆனந்தாச்சிரமம் விளங்கிவருகின்றது.

செல்வச்சந்நிதி ஆலய சித்தர் பாரம்பரியம் செழுமையடையப் பணி செய்தவர்களில் சடைவரத சுவாமிகளுக்கும் தனிச்சிறப்புண்டு. இவ்வாலயத்திலுள்ள தொண்டர் மடம் அல்லது அடியவர்மடம் என்பதனை அமைத்துப் பணி செய்தவர் இவரே. சரவணை எனும் இயற்பெயருடைய இவரை சரவணைச்சாமி என்றும் அழைத்தனர். இவர் முருகேசுச் சுவாமிகளிடம் உபதேசம் பெற்றவர். முருகேசுச் சுவாமியார் தீவுப்பகுதியைச் சேர்ந்தவராயினும் கொடிகாமத்திலேயே தமது காலத்தின் பெரும்பகுதியைக் கழித்திருந்தார். முருகேசு சுவாமிகள் சமாதியடைந்த பின்னரான காலத்தில் அவரது சீடராக விளங்கிய பொன்னம்மா என்பவரை சடைவரதர் குருவாக வழிபட்டார். பொன்னம்மாவின் சமாதி உசனில் உள்ளது.[5]

செல்லப்பாச் சுவாமிகளின் சீடர்களில் ஒருவராகமறவன்புலவு குழந்தைவேற் சுவாமிகள் விளங்கினார். மறவன்புலவு சின்னத்தம்பிச் சுவாமிகள் குழந்தைவேல் சுவாமிகளின் சீடராவார். செல்வச்சந்நிதி ஆலயச்சூழலில்வாழ்ந்தநடராசாசுவாமிகளால்சின்னத்தம்பி சுவாமிகள் இவ்வாலயத்திற்கு வரவழைக்கப்பட்டார். சின்னத்தம்பி சுவாமிகளுக்கு தொண்ணூற்று அறுவர் சீடர்களாக உள்ளனர். இவர்கள் பற்றிய விபரங்கள் கையெழுத்துப் பிரிதியாக உள்ளது.[6]இவர்களுள் இருபாலாரும் அடங்குவர். குழந்ததைவேற் சுவாமிகளினதும், சின்னத்தம்பி சுவாமிகளினதும் சமாதிகள் மறவன்புலோவில் அருகருகே அமைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சின்னத்தம்பி சுவாமிகளின் சீடர்கள் பலரில் தலையாயவராக முருகுப்பிள்ளை சுவாமிகள் விளங்கினார். இவரை மௌனகுருசுவாமிகள் அல்லது கடவுள்சுவாமிகள்என்றும்சுட்டுவர். இவர்களின்சீடவிருட்சம் இன்றும் தளிர்த்து நிக்கின்றமை சிறப்பிற்குரிய அம்சமாகும். கடவுள் சுவாமிகள் அல்வாயைச் சேர்ந்தவர். சிதம்பரத்தில் தங்கியிருந்த காலத்தில் குரு வேட்கையோடு ஈழம் திரும்பிய இவர் செல்வச்சந்நிதிக்குச் சென்று சின்னத்தம்பி சுவாமிகளை குருவாக ஏற்றுக்கொண்டார். சின்னத்தம்பி சுவாமிகளால் மறவன் புலோவில் தோற்றுவிக்கப்பட்ட சுத்தசிவசமரச சன்மார்க்க சாதுசங்க குருபீடம் எனும் பெயரில் அமைந்த சாதுசங்க மடத்தின் பணிகளில் உறுதுணையாக விளங்கினார். கடவுள் சுவாமிகளின் பிரதம சிக்ஷயையாக செல்வி. மலர் பொன்னம்பலம் அம்மையார் விளங்குகின்றார். இந்தவகையில் கடவுள் சுவாமிகளின் சீடர்களாக, அவரின் அருள் ஆளுமைக்கு இலக்காகியவர்களாக பலருளர். இவர்கள் பற்றிய விபரங்களை வ.குமாரசுவாமி நிரற்படுத்தியுள்ளார்.[7]

ஈழத்தில் வாழ்பவர்கள் மட்டுமன்றி வெளிப் புலத்தில் வாழ்பவர்களும் செல்வச்சந்நிதி ஆலயத்தை வாழிடமாகக் கொண்டிருந்தனர். இவர்களுள் கௌரிபாலா சுவாமிகள் (ஜேர்மன்), ஆனைக்குட்டி சுவாமிகள் (இங்கிலாந்து), நரிக்குட்டி சுவாமிகள்(ஆஸ்திரேலியா), பன்றிக்குட்டி

5 முத்தையா, நா., 2004,ஈழத்துச் சித்தர்கள், பக். 82-83.

6. குமாரசுவாமி.வ.,2010,ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் மௌனகுரு கடவுள் சுவாமிகள், பக். 94 - 96.

7. மேலது, பக். 91 - 93.

சுவாமிகள் (தென்னிந்தியா) ஆகியோர் சுட்டித்துக் கூறத்தக்கவர்களாவர். இவர்கள் பற்றிய கீழ்வரும் குறிப்பு மனங்கொள்ளற்பாலது.[8]

*"உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து கூடியிருக்கும்சுவாமிகளால் சைவசயத்தவர்களுக்குப் பெருமையும் புகழும் உண்டாகிறது. இவர்களில் நால்வர் செல்வச்சந்நிதிக்கந்தன்மேற்கொண்ட காதலினால் மயக்குண்டு அவ்விடமேவாசஞ் செய்கின்றனர்.*

*கௌரிபாலா என்றழைக்கப்படும் சுவாமி. ஜேர்மன் தேசத்தவரான இவர் சைவ சமய அடிப்படைக் கருத்துக்களை நன்கு தெரிந்துகொண்டு சமயப்பிரசாரமும் செய்து வருகின்றார்.*

*பெருமைப்படக்கூடிய மற்றொரு சுவாமி இலங்கையின் முன்னைநாள் கவர்னராகவிருந்த சோல்பரிப் பிரபுவின் மகனாவார். இவரை ஆனைக்குட்டிச் சுவாமி என்று அழைப்பார்கள். இவரைப் பற்றி அறியாத சைவசமயத்தவர் ஒருவர் கூட இருக்கமாட்டார்கள் என்று கூறலாம். இவர் கௌரிபாலா சுவாமியவர்களின் தொடர்பால் சைவசமயத்தில் பற்றுக் கொண்டு துறவு பூண்டதாக அறிய முடிகின்றது.*

*இவர்களுள் ஆஸ்திரேலியா தேசத்தைச் சேர்ந்த நரிக்குட்டி என்றழைக்கப்படும் சுவாமியும், தென்னிந்தியாவைச் சேர்ந்த பன்றிக்குட்டி என்றழைக்கப்படும் சுவாமியும் இருக்கின்றனர். இவர்கள் தங்களுக்கெனத் தனித்தனியே அழகான சிறு குடிசைகள் அமைத்துக்கொண்டு அவற்றை மிகவும் சுத்தமாக வைத்து வாழ்கின்றனர். இக்குடிசைகள் கோவிலுக்குத் தென்புறமாகவுள்ள ஆனந்தாச்சிரம மடத்திற்கருகில் அமைந்துள்ளன. இவர்கள் நால்வரும் தங்களுக்குள் சைவசமயத்தைப்பற்றிக் கலந்துரையாடியும், சைவ பக்தர்களோடு அன்புததும்பச் சம்பாஷித்தும் சைவசமயப்பற்றை வளர்த்தும் வருகின்றனர்"*

தற்காலத்திலும் செல்வச்சந்நிதி ஆலயமானது சித்த புருஷர்களின் புண்ணிய ஸ்தலமாக விளங்கி வருவதனை அவதானிக்கலாம். இவர்களில் பெரும்பாலானோர் தம்மை சித்துத் தன்மையுடையவர்களாக இனங்காட்டிக் கொள்ளாது மௌனமாக இருந்து இறைபணி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சிலர் மடங்களில் தங்கியிருந்து பணிசெய்து வருகின்றனர். வேறுசிலர் இப்புண்ணிய சேத்திரத்திற்கு வந்து செல்பவர்களாக உள்ளனர்.

8. மனோன்மணி சண்முகதாஸ், அருணாசலம் சண்முகதாஸ், மு.கு.நூ. பக். 62 - 63

## ஆய்வின் முடிவுகள்

செல்வச்சந்நிதி ஆலயப்பண்பாட்டுச் சூழலில் சித்தர் பாரம்பரியம் என்னும் தலைப்பிலமைந்த இவ்வாய்வில் கீழ்வரும் முடிவுகள் பெறப்படுகின்றன.

- செல்வச்சந்நிதி ஆலய தோற்றம் பற்றிய சிந்தனைகள் சித்தர் நெறியுடன் தொடர்புற்றுக் காணப்படுகின்றன.
- இவ்வாலயப் பண்பாட்டுச் சூழலில் வலிமையானதொரு சித்தர்பாரம்பரியம் நீண்ட காலமாக குரு – சீட மரபுவழி உறவின் மூலம் தொடருறுப்பெற்று வருகின்றது.
- இவ்வாலயம் சார்ந்த பண்பாட்டுச் செல்நெறி உயிரோட்டமாக தொடருறு நிலையடைவதற்கு இங்கு வாழ்ந்து பணிசெய்து வருகின்ற சித்தர்களின் வகிபங்கு அளப்பரியதாகவுள்ளது.
- இல்லறச் சித்தர்கள், துறவறச் சித்தர்கள் என இருவகைப்பட்ட சித்தர் பாரம்பரியம் நிலைபெற்று வருகின்றது.
- ஆண், பெண் என்ற பேதமற்று இருபாற் சித்தர்களும் வாழ்ந்து வருகின்றனர்.
- இவ்வாலயச் சூழலில் மடம் அமைத்து தங்கி நின்று பணி செய்வோர், வந்து செல்வோர் என்ற தன்மையில் சித்தர் பாரம்பரியம் பேணப்பட்டு வருகிறது.எனவே செல்வச்சந்நிதியில் ஒரு வாழ்வியற் பண்பாடு நிலைபெறுவதற்கு அங்கு அமைந்துள்ள மடங்களின் வகிபங்கு தனித்துவமானதாகும்.
- செல்வச்சந்நிதி ஆலயம் மக்களின் பக்தி வேட்கையைத் தணிக்கும் ஆன்மீகத் தளமாக மட்டுமன்றி தூயவாழ்வியற் பண்பாட்டை வளர்க்கும் ஓரிடமாகவும் திகழ்கிறது. இத்தகைய சிறப்பின் இருப்புக்கு சித்தர்களின் வகிபங்கு அளப்பரியதாகும்.
- மக்களின் மனத்தினில் ஊறித்திளைத்த சிறந்த பண்பாடாகக் கருதப்படும் 'பக்தி உணர்வு' என்பது ஏனைய வாழ்வியற் பண்பாட்டு வளர்ச்சிக்கு அடியூற்றாகும்.'அனைத்தும் செல்வச்சந்நிதியான் திருவருளே'என்ற மனோநிலையை மக்கள்

மத்தியில் ஆழவிதைத்தவர்கள் சித்தர்களே எனத் துணிந்து கூறலாம். இவ்வகையில் இவ்வாலயச் சூழலில் பக்திப் பண்பாடு வளரவும், பரவிப் படரவும் சித்தர்கள் காரண புருஷர்கள் எனக் கூறலாம்.

- பண்பாட்டின் உயிர் நாடியான "விருந்தளித்தல்' என்னும் செயற்பாட்டின் உயிரோட்டத்திற்கு இவ்வாலயச் சூழலில் வாழும் சித்தர்களின் பங்கு அளவிடற்கரியது.

- ஆலயம் சார்ந்த சமூக இடைவினைகளைத் தோற்றுவிப்பதில் சித்தர்களின் செயற்பாடுகள் காத்திரமானவையாகவுள்ளன. முக்கியமாக இவர்களால் முன்னெடுக்கப்படுகின்ற தலயாத்திரைகள் அல்லது புனிதப் பயணங்கள் இவ்வாலயத்தை மையப்படுத்தியதாக உள்ளது. இச்செயற்பாடுகள் இத்தலத்திற்கும் ஏனைய தலங்களுக்கும் இடையிலான பிராந்திய உறவுகளை நெருக்கமாக்குவதுடன். சமூக ஒருமைப்பாட்டிற்கும் வழிசமைக்கின்றன.

- பொதுவாக சித்தர்கள் ஆலய வழிபாட்டிற்கு எதிரானவர்களாக, நிறுவன எதிர்ப்பாளர்களாக (anti–establishment) விளங்கினர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதுண்டு. ஆனால் ஈழத்துச் சித்தர் செல்நெறியில் இச்செயல்களைக் காணமுடிவதில்லை. மாறாக, அவர்களின் செயற்பாடுகளால் ஈழத்துத் திருத்தலங்கள் சிறப்புப் பெற்று விளங்குவதனை அவதானிக்க முடிகின்றது.

- மக்களின் வாழ்வினைநெறிப்படுத்தும் கூறுகளை ஒருபண்பாட்டின் நெறியியற் கூறுகள் எனக் கூறலாம். சமுதாயத்தில் உள்ள ஒருவர் எப்படி வாழ வேண்டும்? எவற்றைச் செய்ய வேண்டும், எப்படிச் செய்யவேண்டும்?செய்யத்தக்கனயாவை? செய்யத் தகாதன யாவை? போன்ற விதிமுறைகளோடு நெறியியற் கூறுகள் தொடர்புடையனவாகும். விழுமியங்கள்,நெறிமுறைகள், அளிப்புகள், வழக்கங்கள், பழக்கங்கள் முதலியன இதனுள் அடங்கும். இத்தகைய நெறியியல் சார்ந்த பண்பாட்டுக் கூறுகள் இவ்வாலயச் சூழலை மையப்படுத்தியதாக சித்தர் பாரம்பரியத்தினூடாக செழுமையடைந்திருக்கின்றன எனக் கருத முடிகின்றது.

ஆகவே, சமூகத்தில் சமயத்தின் தேவை என்ன? என்பதனை சமய நிறுவனங்களினூடாக பொருத்திப் பார்க்க முற்படுவோர்க்கு செல்வச்சந்நிதி ஆலயமும், அங்கு வாழ்ந்த சித்தபுருஷர்கள் - அவர்கள் அமைந்த மடங்கள், ஆச்சிரமங்கள் என்பனவும் சான்றளிப்பனவாக உள்ளன எனக் கூறலாம்.

## நவபாஷாணத்தின் மகிமை



**நவபாஷாணம் என்றால் மருத்துவக் குறிப்புகளின் படி விஷத்தன்மை வாய்ந்த பொருள். வீரம், பூரம் என பல சித்த மருந்துகள் இப்படி உள்ளன. இவற்றை மற்றைய பொருட்களுடன் பக்குவமாகக் கலந்து சாப்பிடுவதற்கும், உடம்பில் பூசுவதற்கும் பல மருந்துகளை சித்தர்கள் கண்டுபிடித்தனர். சிற்ப சாஸ்திரத்தில் வண்டல் மண் சேற்றைப் புளிக்க வைத்து, பாஷாணங்களில் எட்டு பொருட்களைப் பக்குவமாகச் சேர்த்துப் பல மாதங்கள் ஊறவைத்த பின், அதனைக் கொண்டு விக்கிரகம் செய்யும் முறை கூறப்பட்டுள்ளது. இந்த முறையை "நவபாஷாணம்' என சித்த மருத்துவசாஸ்திரம் கூறுகிறது. "நவ' என்றால்"ஒன்பது' புளிக்க வைத்த வண்டல் சேறு மற்றும் எட்டு வகையான பாஷாணங்கள் சேர்ந்தது "நவபாஷாணம்'எனப்படும். இந்த முறையில் போகர் என்னும் சித்தர் வடிவமைத்ததே பழநியாண்டவர் விக்கிரகம். இங்கு அபிஷேகம் செய்த பால், பஞ்சாமிர்தம் ஆகியவை முருகனின் அருளோடு, நோய்களைப் போக்கும் மருந்தாகவும் ஆகிறது.**

"அர்த்தமுள்ள இந்து ஆலய வழிபாடு"